முருகப்பெருமான் துணை

**மகான் சகாதேவன் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. தவசியே கலியில் அவதரித்த
தருமராசனே ஆறுமுக அரங்கனே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
2. ஆசியை பிலவ மிதுன திங்கள்
அய்நான்கு திகதி கதிரோன்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 20ம் நாள், 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை)
ஆசிபட சகாதேவன் யானும்
அருளுவேன் உலகோர் நலம் பெற
3. நலம்தரும் அரங்கஞானி வழி
நன்மைதரும் ஞான ஆட்சி காலம்
பலம்பெற உருவாக இருக்க
பழுதில்லா ஞானவழிக்கு வந்து
4. வந்துமே உலகமக்களெல்லாம்
வணங்கி அரங்கன் பதம் பணிந்து
சிந்தைபட செபதபம் செய்து
செப்பிடவே ஞானிகள் பூசை
5. பூசைதனை முறையாக செய்து
புண்ணியம் பெருகும் படியாக
தேசிகனின் தருமம் தன்னை
தேசமெங்கும் செய்து வர
6. வருகவே வையகம் எங்கிலும்
வள்ளல் தன்மை வளர்ந்து
ஆறுமுகன் அரங்கன் ஆசியதும்
அழியாமை கொண்ட மக்கள் படையை
7. படையை உருவாக்கி உலகில்
பழுதில்லா ஞானவான்களாகி
சோடையிலா உலகம் மாற்றம்
சுத்தநெறிவழி இனிதே காணும்
8. காணவே மாற்றம் நடத்தும்
கலியின் அவதார ஞானி
ஞானதேசிகனை உலகம் அறிய
நம்பிக்கைமிகுந்த உலகாக மாறும்
9. மாறுதலும் நல்ல ஆறுதலும்
மாதவசி மக்களுக்கு அருளி
தேறுதல் செய்யும் சக்தியாக
திருவருளாக விளங்கி நிற்க

10. நிற்கவே சன்மார்க்க வழியே
நீதிமான்களை உலகில் உருவாக்கி
அற்புதமான ஞானத் தலைமையும்
ஆறுமுகனார் ஞான ஆட்சியும் உருவாகும்

11. ஆகவே யோகபிரசன்ன ஆசி முடிவுற
அகத்தியர் முதலான ஞானிகள் இனி
மகான் அரங்கனுக்கு துல்லியஆசிநூலை
மண்ணுலகம் சிறக்க விளம்பிடுவர்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–